சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. P.V.சாண்டிலியன்.,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2024-ம் ஆண்டு ஜூன் திங்கள் 27-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.3/2024.

இன்

அசல் வழக்கு எண்.101/2016

....

நாகராஜன் .. மனுதாரர்/வாதி

..எதிர்..

K.N.கண்ணப்ப சுப்பிரமணியன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 20.06.2024 ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.சோமநாதன் அவர்கள் ஆஜராகியும் ,எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு . சி. ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

அசல் வழக்கில் DW1-ஐ Re-call செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டப்பிரிவு கட்டளை 18, விதி 17 மற்றும் சிபிசி செக்ஷன் 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கிலும் வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு விசாரணை முடிந்து இருதரப்பிலும் வாதுரை செய்வதற்காக 25.03.2024-ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வா.சா.ஆ.1 ஐ தன் கைப்பட எழுதிய பிரதிவாதி அதை தான் எழுத வில்லை எனவும் அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை எனவும்

வாக்கு மூலத்தில் பொய்யாக கூறியுள்ளார். எனவே வழக்கை நிரூபிப்பதற்கு பிரதிவாதியை Re-call செய்து இந்நீதிமன்றத்திற்கு முன்பாக அவர் கைப்பட வா.சா.ஆ.1-ல் உள்ள சங்கதிகளை எழுதச்சொல்லி மேற்படியாரின் எழுத்துக்களை வா.சா.ஆ.1 எழுத்துக்களோடு இந்நீதிமன்றத்தில் ஒப்பிட்டு பார்க்க வேண்டியுள்ளதால் பிரதிவாதியை Re-call செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். தற்போது அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி வேண்டுமென்றே உடல்நலம் பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரர்/ பிரதிவாதியை வீண் அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் கடந்த 8 வருட காலமாக அசல் வழக்கை நடத்தி தற்போது இந்த தாவா மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர்/வாதி தரப்பு மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை . சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை . இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

6. கடந்த 25.04.1999 தேதியிட்ட கிரைய எக்ரிமெண்ட் படி வாதி பெயருக்கு பிரதிவாதி கிரையப்பத்திரம் எழுதி பதிந்து தர உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது இருதரப்பு விசாரணை முடிவுற்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது .

மனுதாரரான வாதி தரப்பு வழக்கை மெய்பிப்பதற்கு வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் சாட்சி கையொப்பம் செய்துள்ள K.N.ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது . பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதகமும் , தீங்கும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே மேற்படி மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. DW1 recall செய்யப்பட்டு 4 வாய்தாவுக்குள் விசாரித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 27-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2024.06.27 17:23:45 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court
Sivagangai
I.A.No.3/2024

in
O.S.No.101/2016
in
**Draft/Fair/Order**
27.06.2024.